**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.366/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 04.11.2025.**

| Name : ராஜி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் உப்பாரப்பட்டியில் குடியிருந்து ஆடு மேய்க்கும் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது என் தாயார் சின்னதாயி ஆவார். கடந்த 03.02.2025ம் தேதி மாலை 6 மணி சுமாருக்கு என் தாயார் மாடுகளுக்கு புல் புடுங்குவதற்காக சாலையை கடக்க மேற்கு பக்கமிருந்து கிழக்கு பக்கமாக சென்ற போது சாலையை கடக்கும் போது இரு சக்கர வாகனம் ராயல் புல்லட் மேச்சேரியிலிருந்து தொப்பூர் நோக்கி வந்த போது மோதி விபத்தை ஏற்படுத்தியது. விபத்தின் காரணமாக என் தாயாருக்கு தலையில் காயம், கை, கால் ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என் தாயாரை ஆம்புலன்ஸ் மூலம் சேலம் பிரீத்தம் மருத்துவமனையில் கொண்டு சென்று சேர்த்து பிறகு சிகிச்சை அளிக்கப்பட்டது. மறுநாள் மேச்சேரி காவல் துறையினர் வந்த போது என் தாயார் சுயநினைவு இல்லாத நிலையில் மகனாகிய நான் போலீசாரிடம் நடந்த விவரத்தை சொன்னேன். காவலர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். விபத்து குறித்து என் தம்பி வேலுசாமி சொன்னார். போலீசார்

என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) எனக்கு வயது எவ்வளவு என்றால் 51 ஆகும். என் தாயாருக்கு 75 வயதிருக்கும் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த இடத்திலிருந்து நான் குடியிருக்கும் வீடு 200 மீட்டர் தூரத்தில் இருக்கும். சம்பவத்தின் போது நான் எங்கு ஆடு மேயத்துக் கொண்டிருந்தேன் என்றால் சொந்த தோட்டத்தில் ஆடு மேயத்துக் கொண்டிருந்தேன்.

3) விபத்து நடந்து 1/2 மணி நேரத்தில் தகவல் கிடைத்திருக்குமா என்றால் 5 நிமிடத்தில் தகவல் கிடைத்தது. விபத்தை நானோ, என் தம்பி வேலு, செல்வம் மற்றும் என் குடும்பத்தை சேர்ந்தவர்கள் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். நான் செல்வதற்கு முன்னரே ஆம்புலன்ஸ் வந்ததா என்றால் ஆமாம். ஆம்புலன்ஸ் எங்கிருந்து வந்தது என்றால் தொப்பூர் கேன்டின் இருந்து வந்தது. தொப்பூர் கேன்டின் சம்பவயிடத்திற்கு எவ்வளவு நேரத்தில் வர இயலும் என்றால் 45 நிமிடத்தில் வர இயலும். என் தாயாருக்கு சுய நினைவு திரும்பவில்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக என் தாயார் எதுவும் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

4) விபத்து நடந்த இடம் தெற்கு பக்கம் பள்ளமாகவும், வடக்கு பக்கம் மேடாகவும் உள்ளது என்றால் ஆமாம். தெற்கு பக்கம் மேற்கு பக்கம் மரம் செடி கொடிகள் நிறைய உள்ளது என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் ரோட்டிலிருந்து மேற்கு பக்கம் பள்ளமாக இருக்கும் என்றால் ஆமாம். என் தாயார் பள்ளத்திலிருந்து தான் மேடு பக்கம் வந்தார் என்றால் ஆமாம்.

5) அந்த இடத்தில் மேற்கு பக்கத்திலிருந்து யார் வந்தாலும் அந்த இடத்தில் தெரியாது என்றால் ஆமாம். என் அம்மா வைக்கோல் போடுவதற்கு நிறைய வைக்கோல்களை சுமந்து வந்தார் என்றால் ஆமாம். இரு பக்கமும் முகம் தெரியாத அளவிற்கும் சாலை தெரியாத அளவிற்கும் இருந்தது என்றால் ஆமாம். அதனால் தான் சாலையில் வாகனம் வருவதை கவனிக்க இயலாமல் என் தாயார்

விபத்தை தேடிக் கொண்டார் என்றால் ஆமாம். மாலை 6 மணிக்கு சம்பவம் நடந்ததால் இருட்டான நேரம் என்பதால் என் தாயார் நிதானம் இல்லாமல் வந்தார் என்றால் ஆமாம். பள்ளத்திலிருந்து மேடு நோக்கி வரும் போது இரு சக்கர வாகனம் மெதுவாக தான் வர இயலும் என்றால் ஆமாம். விபத்தை நேரில் பார்த்த யாரும் விபத்து குறித்து என்னிடம் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம்.

6) மருத்துவமனையில் என் தாயார் உடல் நிலை சரியில்லாமல் இருந்த போது வெற்று தாளில் போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். பிறகு தான் போலீசார் எழுதிக் கொண்டார்கள் என்றால் ஆமாம். அதனால் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். விபத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.04 17:44:31 +0530

**Judicial Magistrate No.II,**

**Mettur.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.366/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 04.11.2025.**

| | |
|---|---|
| **Name : வேலுசாமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் உப்பாரப்பட்டியில் குடியிருந்து ஆட்டோ ஓட்டும் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது என் பெரியம்மா சின்னதாயி ஆவார். அ.சா.1 என் உறவினர் ஆவார். கடந்த 03.02.2025 ம் தேதி மாலை 6 மணி சுமாருக்கு நான் கலைமகள் சபாவில் குணசேகரன், ராஜேந்திரன் ஆகியோருடன் பேசி கொண்டிருந்தேன். அப்போது என் பெரியம்மா கரும்பு காட்டிலிருந்து புல்லை பிடுங்கி தலையில் வைத்துக் கொண்டு சாலையை கடக்க சாலையில் மேடு பகுதியில் சென்ற போது ராயல் என்பீல்டு மேட்டூர் பக்கமிருந்து தொப்பூர் பக்கம் சென்ற போது என் பெரியம்மா மீது மோதியது.

2) சம்பவத்தை இடிக்கும் போது நான் பார்த்தேன். விபத்தின் காரணமாக கை,கால், தலை ஆகிய இடங்களில் என் பெரியம்மாவிற்கு காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என் பெரியம்மாவை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். ஆஜர் எதிரி தான் இரு சக்கர வாகனத்தை ஓட்டினார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) நான் எந்த ஸ்டான்டில் ஆட்டோ வைத்து ஓட்டுகிறேன் என்றால் வீட்டு முன்பாக வைத்து ஓட்டுகிறேன். சம்பவயிடத்திலிருந்து என் வீடு எவ்வளவு தொலைவில் இருக்கும் என்றால் 150 மீட்டர் தொலைவில் இருக்கும். சம்பவயிடத்தில் பாலம் தெற்கு பக்கமாக உள்ளது என்றால் ஆமாம். பாலத்திலிருந்து 40 அடி தூரத்தில் கலைமகள் சபா மைதானம் உள்ளது என்றால் ஆமாம்.

4) சம்பவயிடத்திலிருந்து மேற்காக உள்ள காடுகள் 5 முதல் 10 அடி பள்ளத்தில் உள்ளது என்றால் ஆமாம். அங்கிருந்து பார்த்தால் சாலையில் உள்ள வாகனம் தெரியாது என்றால் தெரியும். எத்தனை பேர் பேசிக் கொண்டிருந்தோம் என்றால் 2, 3 பேர் பேசிக் கொண்டிருந்தோம். பெரியம்மா தலையில் என்ன சுமந்து சென்றார் என்றால் கரும்பு காட்டில் உள்ள கோரப்புல்லை எடுத்து சென்றார். சுமை பெரியதாக இருந்ததா என்றால் அவ்வளவு பெரியதாக இல்லை.

5) பள்ளத்திலிருந்து மேடு நோக்கி கிழக்கு பக்கம் வரும் போது ரோட்டில் வாகனம் வருவதை தெரியாமல் வந்ததால் விபத்து ஏற்பட்டதா என்றால் சாலையை கடந்த போது விபத்து ஏற்படவில்லை. போலீசார் விசாரணையில் என் பெரியம்மா சாலையை கடக்கும் போது நடந்ததாக சொன்னேனா என்றால் இல்லையா என்றால் நான் சாலையை கடக்கும் போது நடந்ததாக சொல்லவில்லை. சாலையிலிருந்து கிழக்கு பக்கமாக 5 அடி தொலைவு என்றால் ஆமாம். வேறு யார் பார்த்தனர் என்றால் தெரியாது. பெயர் ஞாபகம் இல்லை.

6) நான் தான் ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்தேன். ராஜி சம்பவயிடத்திற்கு நான் தகவல் கொடுத்த 5 நிமிடத்தில் வந்துவிட்டார். போலீசார் எங்கள் வீட்டை காட்ட சொல்லி கேட்டாரா என்றால் கேட்டார்கள் தொலைவிலிருந்து காட்டினேன். என்று கேட்டார்கள் என்றால் மறுநாள் கேட்டார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். நான்சம்வத்தை நேரில் பார்க்கவில்லைஎன்றும் உறவினர் என்பதால் சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் பெரியம்மா பள்ளத்திலிருந்து மேடு ஏறும் போது தானாக விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. எதிரி சம்பவயிடத்தில் தான் விபத்திற்கு பிறகு அரை மணி நேரம் இருந்தார் என்றால் சரிதான். விபத்து எதிரியின் கவனகுறைவால் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் பெரியம்மா அஜாக்கிரதையாக சாலையை கடந்த போது நடந்தது என்றால் சரியல்ல. வாகனம் வேகமாக வந்தது,

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.04 17:44:42 +0530

**Judicial Magistrate No.II,**

**Mettur.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.366/2025**

**Prosecution witness : அ.சா.3** **Date : 04.11.2025.**

| | |
|---|---|
| **Name : குணசேகரன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் உப்பாரப்பட்டியில் குடியிருந்து கல்லூரி படிப்பு முடித்துள்ளேன். விபத்தில் இறந்தது என் தந்தை வழி பாட்டி சின்னதாயி ஆவார். அ.சா.1 என் பெரியப்பா ஆவார். கடந்த 03.02.2025ம் தேதி மாலை 6 மணி சுமாருக்கு நான் உப்பாரப்பட்டி மைதானத்தில் நான் என் சித்தப்பா வேலுசாமி, நண்பர்கள் ஆகியோர் பேசி கொண்டிருந்தேன். அப்போது என் பாட்டி கரும்பு காட்டிலிருந்து புல்லை பிடுங்கி தலையில் வைத்துக் கொண்டு மைதானத்தை ஒட்டி சாலையை கடக்கும் போது ராயல் என்பீல்டு மேட்டூர் பக்கமிருந்து தொப்பூர் பக்கம் சென்ற போது என் பாட்டி மீது மோதியது. நான் மைதானத்தில் இருந்து சம்பவத்தை நேரடியாக பார்த்தேன்.

2) விபத்தின் காரணமாக கை, கால், தலை ஆகிய இடங்களில் என் பெரியம்மாவிற்கு காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என் பாட்டியை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். ஆஜர் எதிரி தான் இரு சக்கர வாகனத்தை ஓட்டினார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) என்னுடன் எத்தனை பேர் கிரிக்கெட் விளையாடினர் என்றால் 11 பேர் விளையாடினர். என் ஊரைச் சேர்ந்தவர்கள், உப்பாரப்பட்டி காட்டு வளவு ரோட்டிலிருந்து மேற்கு பக்கம் உள்ளது. ரோட்டிலிருந்து மேற்கு பக்கம் 1 கிலோ மீட்டர் தள்ளி குடியுள்ளோம் என்றால் ஆமாம். என் பாட்டி எங்கு குடியுள்ளார் என்றால் ரோட்டின் கிழக்காக தனியாக வசித்து வந்தார். விபத்து சத்தம் கேட்டவுடன் சென்று பார்த்தேனா என்றால் ஆமாம். எவ்வளவு நேரம் கழித்து பார்த்தேன் என்றால் 5 நிமிடம் கழித்து பார்த்தேன்.

4) 5 நிமிடத்திற்கு முன்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். அப்போது என்ன செய்து கொண்டிருந்தோம் என்றால் பேசிக் கொண்டிருந்தோம். நான் போலீசார் விசாரிக்கும் போது முதல் விசாரணையில் சொன்னது போல் தான் சொன்னேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.04 17:44:49 +0530

**Judicial Magistrate No.II,**

**Mettur.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.366/2025**

**Prosecution witness : அ.சா.4** **Date : 04.11.2025.**

| | |
|---|---|
| **Name : நந்தகுமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் உப்பாரப்பட்டியில் குடியிருந்து கொரியர் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தது என் தந்தை வழி பாட்டி சின்னதாயி ஆவார். அ.சா.1 என் அப்பா ஆவார். கடந்த 03.02.2025 ம் தேதி மாலை 6 மணி சுமாருக்கு என் பாட்டி கரும்பு காட்டிலிருந்து புல்லை பிடுங்கி தலையில் வைத்துக் கொண்டு மைதானத்தை ஒட்டி சாலையை கடக்கும் போது ராயல் என்பீல்டு மேட்டூர் பக்கமிருந்து தொப்பூர் பக்கம் சென்ற போது என் பாட்டி மீது மோதியது.

2) விபத்தின் காரணமாக கை, கால், தலை ஆகிய இடங்களில் என் பாட்டிக்கு காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என் பாட்டியை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். சம்பவத்தின் போது நான் மார்க்கெட்டில் இருந்தேன். என்அ ண்ணன் முருகன் என்பவர் சம்பவம் குறித்து தகவல் சொன்னார்.

3) கடந்த 04.02.2025 ம் தேதி மாலை 6 மணிக்கு மேச்சேரி போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில்நான் மற்றும் ம ணி இருவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர்

**அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) சம்பவ சமயம் நான் பூ மார்க்கெட்டில் இருந்தேன். எனக்கு எப்போது வேலை நேரம் என்றால் மாலை 4 மணிக்கு சென்று இரவு 10 மணிக்கு வருவேன். சம்பவம் நடந்த தேதியன்று நான் வேலைக்கு சென்றேனா என்றால் அன்றையதினம் வேலைக்கு செல்லவில்லை. நான் என் வீட்டிலிருந்தேன். போலீசார் என்னை இடத்தை காட்ட சொல்லி கேட்டார்களா என்றால் கேட்டார்கள். நான் விவரம் சொன்னேன். போலீசார் லேப்டாப் கொண்டு வந்திருந்தனர். அதில் படம் வரைந்து எழுதினார்கள். என் முன்னிலையில் கையில் வரைந்தார்களா என்றால் ஆமாம். லேப்டாப்பில் வரையவில்லை என்றால் ஆமாம். நான் லேப்டாப்பில் வரைந்ததில் கையொப்பம் செய்யவில்லை என்றால் அவ்வாறு இல்லை. எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 2 கையொப்பம். எழுதிய தாளா என்றால் ஒன்று படம் வரைந்தது. இரண்டிலும் கையொப்பம் செய்தேனா என்றால் மொத்தமாக ஒரு கையொப்பம் வாங்கினார்கள். எதில் கையெழுத்து வாங்கினார்கள் என்று ஞாபகம் இல்லை. தொப்பூர் மெயின் ரோடு என்பதால் நிறைய பேர் இருந்தார்கள், யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் இருந்தார்கள் வரைபடம் வரைந்தார்கள் என்று சொல்வது பொய் என்றும் நான் பேரன் என்பதால் என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றனர் என்றும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.04 17:44:56 +0530

**Judicial Magistrate No.II,**

**Mettur.**